**செய்தி வெளியீடு எண்-186-நாள்- 27.2.2010**

## நரிக்குறவர் நல வாரிய உறுப்பினர்கள் தனியே தொழில் தொடங்கி முனைப்புடன் முன்னேற ஒவ்வொருவருக்கும் 7 ஆயிரத்து 500 ரூபாய் மானியம்!

## குழுக்கள் எனில் தனி நபருக்கு 10 ஆயிரம் ரூபாய் வீதம் குழுவிற்கு அதிகபட்சமாக ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மானியம்!

# முதலமைச்சர் கலைஞர் ஆணை!

தமிழக அரசு உருவாக்கியுள்ள அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியங்களில் ஒன்றான 'தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம்' 27.5.2008 அன்று அமைக்கப்பட்டு, அவ்வாரியத்தில் உறுப்பினர்களுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

நரிக்குறவர் நல வாரிய உறுப்பினர்களுக்கு ஏற்கனவே வழங்கப்படும் பல்வேறு நலத்திட்ட உதவிகளுடன், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடும் நோக்கில், அவர்கள் சுயதொழில் தொடங்கிட மானியம் வழங்கப்படும் என முதலமைச்சர் கலைஞர் ஏற்கனவே அறிவித்திருந்தார்.

அதன்படி, நரிக்குறவர் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களில், தனியாகத் தொழில் தொடங்கும் உறுப்பினர் ஒருவருக்கு அதிகபட்சமாக 7 ஆயிரத்து 500 ரூபாய் முழு மானியமாக வழங்கப்படும் என்றும்; நரிக்குறவர் நலவாரிய உறுப்பினர்கள் குழுவாக ஒன்றிணைந்து தொழில் தொடங்கினால், அந்தக் குழுவின் உறுப்பினர் ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபாய் வீதம், ஒரு குழுவிற்கு அதிகபட்சமாக ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மானியமாக வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

இதன்மூலம் நரிக்குறவர் நலவாரிய உறுப்பினர்கள் அனைவரும் சுயதொழில் தொடங்கி, வாழ்வில் பொருளாதார முன்னேற்றம் காண முனையும் வகையில், இந்த மானிய உதவித் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

*****